திருவண்ணாமலை 'தூய்மை அருணை' சார்பில் வளைகாப்பு விழா!

டாக்டர் கலை கதிரவன் எம்.எல்.ஏ. பரிசுப் பெட்டகங்கள் வழங்கி வாழ்த்து!

திருவண்ணாமலை, அக்.17-

ஆரோக்கியமானத் தாய்தான், ஆரோக்கியமான குழந்தையை பெற்றெடுக்க முடியும், ஆரோக்கியமான குழந்தைகள்தான் சமூதாயத்தை முன்னேற்று வார்கள் என்று மாதந்தோறும் கர்ப்பிணி பெண்களுக்கு நடத்தப்பட்ட வளைகாப்பு விழாவில் கலந்து கொண்டு, தென்காசி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கலை கதிரவன் அவர்கள் பரிசு பெட்டகங்கள் வழங்கி வாழ்த்தி பேசினார்.

16.10.2026 வெள்ளிக் கிழமை காலை 9.30 மணிக்கு, திருவண்ணாமலை, காந்தி நகர் பைபாஸ் சாலையில் உள்ள நகர்ப்புற அருணை மருத்துவமனை வளாகத்தில், தூய்மை அருணை சார்பில், கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழா நடைபெற்றது.

விழாவிற்கு அருணை மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் குணசிங் தலைமை வகித்தார்.

அருணை கல்விக்குழுமங்களின் துணைத் தலைவர் எ.வ.வே.குமரன் அவர்கள் முன்னிலை வகித்தார். அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சி.இ.ஓ., பேராசிரியர் அசோக் தியாகராஜன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

முன்னதாக மருத்துவ ஆலோசனைகளை வழங்கி, மேற்பார்வையாளர் டாக்டர் எ.வ.வே.கம்பன் உரையாற்றினார். விழாவில் கலந்து கொண்டு தென்காசி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கலை கதிரவன் அவர்கள், கர்ப்பிணி பெண்களுக்கு பட்டுச்சேலை, இனிப்புகள், தின்பண்டங்கள் மற்றும் மங்கலப் பொருட்கள் அடங்கிய பெட்டகங்களை வழங்கி வாழ்த்திப் பேசினார்.

அவர் ஆற்றிய உரையிலிருந்து...

தூய்மை அருணையின் சிறப்பான, அற்புதமான ஒரு நிகழ்வில் பங்கெடுப்பது குறித்து பெரிதும் மகிழ்ச்சிக் கொள்கிறேன். சில வாரங்களுக்கு முன்பு தான் தூய்மை அருணை என்கிற அமைப்பு கடந்த 10ஆண்டுகளாக திருவண்ணாமலையில் செயல்பட்டு வருகிறது. உலகெங்கும் இருந்து பல இலட்சக்கணக்கான ஆன்மீகப் பெருமக்கள் வருகை தருகிறார்கள். இதையொட்டி, சுத்தம், சுற்றுச்சூழலை மேம்படுத்த மரம் நடுதல் போன்ற அதிஅற்புதமான நிகழ்வுகளோடு முன்னாள் அமைச்சர் அண்ணன் எ.வ.வேலு அவர்கள் தொடங்கி இருக்கிறார்கள். இதற்கு 4 மேற்பார்வையாளர்களும், 45 ஒருங்கிணைப்பாளர்களும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட தூய்மைக் காவலர்களும் வார, வாரம் பணியாற்றுகிறார்கள் என்பது குறித்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். எனது தென்காசித் தொகுதியிலும் இதைப் போன்று ஒரு அமைப்பைத் தொடங்கி நடத்த வேண்டும் என்ற ஒரு ஊக்கத்தை முன்னாள் அமைச்சர் அண்ணன் எ.வ.வேலு அவர்கள் எனக்கு அளித்திருக்கிறார்கள். அவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது ஒரு குடும்ப விழா போலவே நடைபெறுகிறது. நானும் உங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவன் போலே கலந்து கொண்டிருக்கிறேன். ஒரு பெண் தாயாகப் போகிறாள், என்ன ஒரு அற்புதமான நிகழ்வு, அவள் ஒரு அற்புதமான ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கப் போகிறாள் அது குறித்து அவள் இப்போதே கனவு காணுதலை இப்போதே தொடங்கிவிட்டார். அந்தக்குழந்தை ஒரு மாவட்ட ஆட்சித் தலைவராக, காவல் துறை கண்காணிப்பாளராக, ஒரு மருத்துவராக, ஒரு வழக்கறிஞராக என அவள் கனவு நீண்டு கொண்டிருக்கிறது. அந்தக்குழந்தையின் சிரிப்பு, சந்தோஷம் காண துடிக்கும் என் அன்பு சகோதரிகளை வாழ்த்தி மகிழ்கிறேன்.

7 ஆண்டுகளுக்கு முன்பு திருவண்ணாமலை வந்தேன். இப்போது இருக்கிற திருவண்ணாமலை அசுர வளர்ச்சிக் கண்டிருக்கிறது. புதிய பேருந்து நிலையம், புதிய காய்கறி சந்தை, மு.க.ஸ்டாலின் பூங்கா, புதிய மாதிரிப் பள்ளி, மாட வீதியில் சிமெண்ட் தளம், டைட்டில் பார்க் என அண்ணன் எ.வ.வேலு அவர்களின் சாதனைகளை விரிகிறது.

வருடத்திற்கு ஒரு முறை என்றில்லாமல், மாதா மாதம் கடந்த ஒன்றரை வருடங்களாக அருணை மருத்துவகல்லூரி மருத்துவமனையும், தூய்மை அருணை அமைப்பும் இணைந்து மாதா மாதம் நடத்துவது என்பது ஒரு சாதனைதான். மக்களுக்கு செய்ய வேண்டும் என்கிற எண்ணம் வேண்டும். அது அண்ணன் எ.வ.வேலு அவர்களிடம் நிறைந்திருக்கிறது.

கர்ப்பிணி தாய்மார்கள் உடலை ஆரோக்கியமாக வைத்திருக்க வேண்டும். சத்தான உணவு உண்ண வேண்டும், வாரந்தோறும் பரிசோதனைகளை செய்து கொள்ள வேண்டும். அருணை மருத்துவக் கல்லூரி உங்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து தருகிறது. நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க உங்கள் குடும்பத்தாருடன் நீங்கள் பேச வேண்டும். நீங்கள் உண்ணுகிற உணவு உங்களுக்கு மட்டுமல்ல, உங்கள் வயிற்றிலிருக்கும் குழந்தைக்கும் சேர்த்துதான். ஆரோக்கியமான தாய் தான், ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுக்க முடியும். ஆரோக்கியமான குழந்தை தான் சமூக மேம்பாட்டிற்கு உதவும். நீங்கள் ஆரோக்கியமான குழந்தைகளைப் பெற்று, சிறப்பான சமூகத்தை உருவாக்கிட வாழ்த்தி விடைபெறுகிறேன். இவ்வாறு உரையாற்றினார்.

நிறைவாக தூய்மை அருணை மேற்பார்வையாளர் ப.கார்த்தி வேல்மாறன் நன்றி கூறுகிறார்.

விழாவிற்கான ஏற்பாடுகளை மேற்பார்வையாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, இரா.ஸ்ரீதரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி, பிரியா ப.விஜயரங்கன், இரா.சேஷாத்திரி, இல.குண சேகரன் ஆகியோர் செய்து இருந்தனர்.

விழாவில் டி.வி.எம்.நேரு, ஏ.ஏ.ஆறுமுகம், எஸ்.கண்ணதாசன், சாம்.ரகுநாத், பா.தீபன், வே.காசிநாதன், சம்மந்தன், இரா.சரவணன், மணி(எ)விக்னேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் வடக்குமாவட்டம் மேல்மலையனூர் கிழக்கு ஒன்றியம் பெருவளூர் ஊராட்சி யில்மறைந்த முன்னாள் ஒன்றிய கவுன்சிலர்கள் சாந்தா, ஜானகிராமன் ஆகியோரின் நினைவு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற மாபெரும் இலவச கண் சிகிச்சை மற்றும் பொது நல மருத்துவ முகாமை விழுப்புரம் வடக்கு மாவட்ட செய லாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார். உடன் மேல்மலைய னூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

கழக முன்னோடிகள் சாந்தா, ஜானகிராமன் நினைவு நாளையொட்டி

பெருவளூரில் மாபெரும் மருத்துவ முகாம்!

முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

செஞ்சி அக் 17-

முன்னாள் ஒன்றிய கவுன்சிலர்கள் சாந்தா, ஜானகிராமன் ஆகியோரின் நினைவாக பெருவளூரில் நடைபெற்ற கண் மற்றும் பொது நல மருத்துவ முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மேல்மலையனூர் கிழக்கு ஒன்றியம் பெருவளூர் ஊராட்சியில்மறைந்த முன்னாள் ஒன்றிய கவுன்சிலர்கள் சாந்தா, ஜானகிராமன் ஆகியோரின் நினைவு தினத்தை முன்னிட்டு மாபெரும் இலவச கண் சிகிச்சை மற்றும் பொது நல மருத்துவ முகாம் பெருவளூர் ஊராட்சி மன்றம் அலுவலகம் அருகில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மேல்மலையனூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார்.


பெருவளூர் ராஜீவ் காந்தி, சத்தியமூர்த்தி, கலைச்செல்வி ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில்விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு-மறைந்த சாந்தா ஜானகிராமன் ஆகியோரின் திருஉருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி கண் மற்றும் பொதுநல மருத்துவ முகாமினைத் தொடங்கி வைத்தார்.

சென்னை வண்டலூர் தாகூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனை மருத்துவர்கள் மனுஸ்ரீ, ஷாம் ஆகியோர் தலைமையிலான மருத்துவர்கள் கலந்து கொண்டு பொது மருத்துவம், எலும்பு மருத்துவம், கண் மருத்துவம் பொதுநல அறுவை சிகிச்சை உள்ளிட்ட நோய்களுக்கு சிகிச்சை அளித்தனர் .கண் சிகிச்சை முகாமில் கண் பரிசோதனை செய்து கண் அறுவை சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்பட்டவர்கள் வண்டலூர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

முகாமில் 300க்கும் மேற்பட்ட பொது மக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

நிகழ்ச்சியில் ஒன்றிய கவுன்சிலர் பெருமாள், ஊராட்சி மன்ற தலைவர் கந்தவேல், நிர்வாகிகள் மாவட்ட பிரதிநிதி செந்தில் குமார், செல்வராஜ், மாணவர் அணி ஆறுமுகம், சேரலாதன், நெல்சன், சேகர், கோடீஸ்வரன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். மருத்துவ ஒருங்கிணைப்பாளர் மதுசூதன நன்றி கூறினார்.

ஏதும் இல்லை!



இல்லையோ
இல்லை!
இந்த
“machine made”
ஆட்சியிடம்..
இதயம்
இல்லை
இரக்கம்
இல்லை
மூளையும்
இல்லை
மூளைக்கு
வேலையும்
இல்லை
விலங்கின்
மொழி
விசிலுக்கு
வெறியாட்டம்
போடும்
அரை வேக்காட்டு
ஆட்சியில்
கார்மேகப்
பொழிவும்
இல்லை
காவிரியில்
நீரும்
இல்லை
கரண்ட்டும்
இல்லை...
கட்டணக்
கொள்ளைக்கு
அளவும்
இல்லை
கடுகு பருப்பு
அரிசி
எண்ணெய்
அத்தனை
விலையும்
எகிறுது
எல்லை
எதற்கும்
இங்கே
கடிவாளம்
இல்லை
கட்டுப்பாடு
இல்லை
சட்டம் ஒழுங்கு
சுத்தமா
இல்லை
சந்தி சிரிக்குது
சதா
கொலையோடு
கொள்ளை...
பாட்டிலுக்கும்
யூனிட்டுக்கும்
பகல் கொள்ளை
அதுக்கு
பஞ்சாப்பை
பாருங்குது
அந்த
“பைத்தியத்”
தொல்லை
பொட்டு
மாமாவுக்கு
புத்தி
இல்லை
பொறுப்பை
உணர்த்த
ஒருத்தனும்
சுத்தி
இல்லை
அறிவியல்
தமிழோடு
ஆயிரம்
மொழிகள்
அவனியில்
இருக்க
காட்டு மிராண்டி
காலத்தைப்
போல
இந்த சத்துக்
குறைபாடு
கும்பலுக்கு
சதா
சைகை காட்டி
அலைவதன்றி
வேறு
சரக்கு மிடுக்கு
எதும் இல்லை...
ஆம்....
இந்த
தத்திகளை
விமர்சிக்க
இனி
கமெண்ட்டும்
இல்லை
தகலி
தலைமைச்
செயலகத்தில்
கரண்ட்டும்
இல்லை...
என்ன நாஞ் சொல்றது!



மருது அழகுராஜ்
கழக செய்தித் தொடர்புக் குழுத் துணைத் தலைவர்

33 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தஞ்சைப் பெரியார், முன்னாள் அமைச்சர்

மன்னை ப.நாராயணசாமி

அவர்கள்

17.10.2026



“எறும்பனையர் எம் மறவர்
இன்னனையர் நம் மன்னை”
– பேரறிஞர் அண்ணா

“மன்னை எனது அன்னை”
– முத்தமிழ் அறிஞர்
கலைஞர்

..... என்றும் உங்கள் வழியில் பேரன் .....

மன்னை த.சோழராஜன் B.E.,

நகர்மன்றத் தலைவர் – மன்னார்குடி
(மாநில மாணவர் அணி துணைச் செயலாளர்)